செய்தி வெளியீடு எண் :38 நாள் :22.04.2018

**தேனி மாவட்டம்,**

***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் 10,292 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.13.79 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகளையும், 100 உழைக்கும் மகளிர்களுக்கு ரூ.24.97 இலட்சம் மதிப்பிலான மானியத்தொகையினையும் வழங்கினார்:***

******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஜமீன்தாரினி காமுலம்மாள் நினைவு மேல்நிலைப்பள்ளியில் இன்று (22.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற அரசு விழாவில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் 10,292 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.13.79 கோடி மதிப்பிலான விலையில்லா மடிக்கணினிகளையும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையம் (மகளிர் திட்டம்)த்தின் சார்பில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 100 உழைக்கும் மகளிர்களுக்கு ரூ.24.97 இலட்சம் மதிப்பிலான மானியத்தொகையினையும், 11.03.2018 அன்று குரங்கனயில் எதிர்பாரதவிதமாக ஏற்பட்ட காட்டுத்தீ விபத்தின் மீட்பு பணிகளில் மாவட்ட நிர்வாகத்துடன் ஈடுபட்ட 38 நபர்களுக்கு பாராட்டு மடல்களையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழக மாணவ, மாணவியர்கள் விஞ்ஞான வளர்ச்சியோடு இசைந்து கற்கின்ற கல்வியில் தொழில் நுட்ப இடைவெளியை குறைப்பதற்காக விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தை 2011-12 ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தினார்கள். சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறையின் மூலம் முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் 2011-12-ஆம் நிதியாண்டு முதல் 2015-16-ஆம் நிதியாண்டு வரையிலான 5 ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்தம் 31,78,019 மடிக்கணினிகள் ரூ.6,465.44 கோடி நிதி ஒதுக்கீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் நமது மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு 58,437 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. 2016-17-ஆம் நிதியாண்டில் மாநிலம் முழுவதும் 5,41,304 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் நமது மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு 10,848 மடிக்கணிகள் வழங்கப்பட்டுள்ளது. 2017-18-ஆம் நிதியாண்டில் மடிக்கணினிகள் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரூ.758 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறையின் 2018-19-ஆம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் 100 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைபள்ளிகளாகவும், 100 உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்த்திடவும், பள்ளி செல்லாமல் இடைநின்ற 33,519 குழந்தைகளை கண்டறிந்து, மீண்டும் பள்ளியில் சேர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ரூ.533 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், 14 வகையான விலையில்லா திட்டங்களுக்கு ரூ.1,654 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் இடைநிற்றலை குறைத்திட தலா ரூ.5,000/- வீதம் ஊக்கத்தொகை வழங்கிட ரூ.314 கோடியும், அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்திற்கு ரூ.1,750 கோடியும், அனைவருக்கும் இடைநிலை கல்வி திட்டத்திற்கு ரூ.850 கோடியும், தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை திட்டத்திற்கு ரூ.201 கோடியும், பள்ளிக்கல்வித்துறைக்கு என மொத்தம் ரூ.27,205,88.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உயர்கல்வித்துறைக்கு முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்களுக்கு அரசு வழங்கும் கல்வி கட்டண செலவுக்கா ரூ.683 கோடியும் சேர்த்து ரூ.4,620.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவச் செல்வங்கள் மடிக்கணினிகளைப் பெற்று, புதிய விஞ்ஞான உலகத்தில் அடியெடுத்து வைக்கும் இனிய தருணம் இது. மாணவர்களும், மாணவியர்களும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்று சொன்னால், உள்ளத்தில் உறுதி வேண்டும். உழைப்பில் ஊக்கம் வேண்டும். எதையும் சாதிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படையாக நம்பிக்கை வேண்டும். எந்த செயலையும் வெற்றியுடன் நிறைவேற்ற என்னால் இயலும் என்ற நம்பிக்கையை மாணக்கர்கள் பெற்றிட வேண்டும். அதைப்பற்றிக் கூறும் போது ஒரு கதை நினைவிற்கு வருகிறது. ஓர் ஊரில் நீண்ட காலமாக மழை பெய்யவில்லை. விவசாயிகள் பயிர்செய்ய இயலவில்லை. தண்ணீர் இல்லாமல் மக்கள் வாடினார்கள். ஊரின் வறட்சியைப் போக்குவதற்கு என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். அதனால் அந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கடவுளிடம் முறையிட்டார்கள்.

அவர்கள் சொன்னதை எல்லாம் கனிவுடன் கேட்ட கடவுள் அவர்களைப் பார்த்து தெய்வீகப் புன்னகையுடன் தீர்க்கமான குரலில் சொன்னார். நாளை விடியற்காலை 5 மணிக்கு நீங்கள் எல்லோரும் இந்த இடத்திற்கு வர வேண்டும். நானும் இங்கே வருவேன். அப்போது மழை கட்டாயம் பெய்யும். இப்போது நீங்கள் போகலாம்! என்று கூறினார். அதேபோல மறுநாள் விடியற்காலை 4 மணியில் இருந்தே ஊர் மக்கள் வரத்தொடங்கி விட்டார்கள். 5 மணி அளவில் ஏறத்தாழ எல்லா மக்களும் வந்துவிட்டார்கள். கடவுளும் அங்கு நேரில் வருகை தந்து, கூடியிருந்து மக்கள் அனைவரையும் ஒரு சுற்றுப்பார்த்தார். அவரது பார்வை கூட்டத்தில் நின்றிருந்த ஒருவர் மீது குறிப்பாக படிந்தது. அடுத்த கணமே வானத்தை அண்ணாந்து பார்த்தார். உடனே பெருமழை பொழியத் தொடங்கியது. அந்த பெருமழையில் நனைந்த மக்கள் கடவுளைப் பார்த்து, சாமி உங்கள் கருணையே கருணை! உங்கள் அருளால் எங்கள் துன்பம் எல்லாம் நீங்கியது! என்று கூறியபடி நெடுஞ்சாண் கிடையாக கீழே விழுந்து கடவுளை வணங்கினார்கள்.

அப்போது கடவுள் சொன்னார். இந்த மழை பெய்ய யார் காரணம் என்று தெரியுமா? அதோ அங்கே பாருங்கள், அவரால் தான் மழை வந்தது என்று சுட்டிக்காட்டினார். எல்லோரும் அவர் சுட்டிக்காட்டிய திசையில்பார்த்தார்கள். அங்கே பெய்து கொண்டிருந்த மழையில் நனையாமல் குடை பிடித்தப்படி ஒருவர் நின்று கொண்டிருந்தார். கடவுள் சொன்னார் பார்த்தீர்களா அந்த மனிதரை? நான் மழை வரும் என்று சொன்ன போதும் என்மீது உங்களுக்கு சந்தேகம் இருந்தது. இருந்தாலும் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம் என்று வந்தீர்கள். ஆனால் அங்கு நிற்கிறாரே, அவர், நான் சொன்னதில் மாபெரும் நம்பிக்கை வைத்தார். அதனால் தான் மழை பெய்யும் என்று சொன்னதும் அதை உறுதியுடன் நம்பி, கையில் குடையுடன் வந்திருக்கிறார்.

அவரது நம்பிக்கையால் தான் இப்போது மழை பெய்து கொண்டிருக்கிறது. இன்னும் மழை பெய்யும். அப்படிப்பட்ட நம்பிக்கை உங்களுக்கும் வேண்டும் என்று கூறிவிட்டு மறைந்தார். இத்தகையை நம்பிக்கையை மாணவச் செல்வங்கள் ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டும். செய்கின்ற முயற்சியில் நம்பிக்கை வேண்டும், ஆற்றுகின்ற செயலில் நம்பிக்கை வேண்டும. நம்முடைய உழைப்பில் கட்டாயம் நம்பிக்கை வேண்டும். அத்தகைய நம்பிக்கையால் நமக்கு எப்போதும் வெற்றியே கிட்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் என மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழவில், தேனி பாராளுமான்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி அ.வசந்தி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு.வீ.செல்வம் அவர்கள், ச.ராஜேஸ்வரி அவர்கள் முன்னாள் தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.கணேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**